பதிவு அஞ்சல் ஒப்புகை சான்றுடன்

நகர் ஊரமைப்புத் துறை

நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.இரா.வாழவந்தான், பி.இ.,

ந.க.எண்.6817/2019/ கோமா நாள் :05.05.2021.

ஐயா,

பொருள் : மனைப்பிரிவு - மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் - கோயம்புத்தூர் மாவட்டம் – சூலூர் வட்டம் - மோப்பிரிபாளையம் பேரூராட்சி மற்றும் கிராமம் –- க.ச.எண்கள். 281/2H, 281/2J, 282/3C, 283/1 & 283/2–ல் 8.12 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு - தொழில் நுட்ப அனுமதி வரைபடம் - நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது – உள்ளாட்சிக்கு மேல்நடவடிக்கைக்கு அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை :

1. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.337/2020/ TCP-3 நாள்.16.04.2021.
2. மனுதாரர் திரு.K.ராதா கிருஷ்ணன் மற்றும் 3 நபர்கள் கடிதம் மற்றும் விண்ணப்பம் எண் 201900601014773 நாள்.14.10.2019.
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண். 14619/88/பிசிசி நாள்.27.04.1988
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.40483/90/எல்ஏ-1 நாள்.07.11.1992
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.7978 /2012/எல்ஏ-2 நாள்.19.04.2019.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.13686/2017/எல் ஏ1 நாள்.08.09.2017.
7. நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்.2201/2017 SPL cell நாள்.28.09.2017.
8. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர் புற வளர்ச்சி துறை நாள்.04.05.2017.
9. வேளாண்மை இணை இயக்குநர், கோயம்புத்தூர் -13, கடித எண்.இ1/12412/2019 நாள்.02.12.2019.

****

உத்திரவு

கோயம்புத்தூர் மாவட்டம் – சூலூர் வட்டம் - மோப்பிரிபாளையம் பேரூராட்சி மற்றும் கிராமம் –- க.ச.எண்கள். 281/2H, 281/2J, 282/3C, 283/1 & 283/2–ல் 8.12 ஏக்கர் பரப்பில் உத்தேச குடியிருப்பு அனுமதி பார்வை 1-ல் கண்டிய நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு **ம.வ/ந.ஊ.இ.எண்.81/2021** என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்திற்கு இவ்வலுவலகத்தால் **ம.வ/கோ.மா.எண்.96/2021** என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குவதற்கான அரசுக்கு செலுத்த வேண்டிய நன்னிலை வரித் தொகையும் பெறப்பட்டுள்ளது.

715

புன்செய் விவசாய பகுதியிலிருந்து விவசாயமல்லாத குடியிருப்பு மனைப்பிரிவாக அபிவிருத்திக்கு மாற்ற நிலஉபயோக மாற்ற பயன்பாட்டிற்கு அரசாணை எண்.79 வீட்டுவசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள்.04.05.2017-ன் விதி-3ன்படி ரூ.1000/- பரிசீலனைக் கட்டணம், உள்ளாட்சியில் பெற்றும் விதி-9ன்படி 3% மனைப்பிரிவு மொத்த இடத்தின் விற்பனை மதிப்பில் (market value)ல் கீழ்கண்ட அரசுக் கணக்குத் தலைப்பில் மனைப்பிரிவு விண்ணப்பதாரரிடமிருந்து பெற்று உள்ளாட்சியால் செலுத்தப்படவேண்டும். செலுத்திய விவரம் இவ்வலுவலகத்திற்கும் தெரிவிக்கப்படவேண்டும்.

கணக்குத் தலைப்பு

0217 Urban Development
60 Other Urban Development schemes
800 Other Receipts.
AS Receipts under Land use conversion charges
27 Non Taxation fees – 09 collections
(DPC: 0217-60-800-AS-2790)

அவ்வாறு நிலப்பயன்மாற்றத்தொகை அரசுக்கு செலுத்திய பின்னரே நிலப்பயன்மாற்றமும் தொழில்நுட்ப முன் இசைவும் அமுலுக்கு வரும், அதன்பின்பே உள்ளாட்சி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கப்படவேண்டும்.

மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் அளிக்கப்படும்போது மனைப்பிரிவு நிபந்தனை எண்.19(ஈ)-ன் படி உள்ளாட்சி மன்றத் தீர்மானம் மற்றும் அவ்வாணையின் நகலினை உடனடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. நகர் ஊரமைப்பு இயக்குநர் உத்தரவு கடிதம், மனைப்பிரிவு நிபந்தனைப்படிவம், மனைப்பிரிவு வரைபட நகல் மற்றும் இக்கடிதம் பெற்றுக்கொண்டமைக்கு மறுதபாலில் ஒப்புகைச்சான்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இணை இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கோயம்புத்தூர் மாவட்டம்

5.5.21 5/5/21

இணைப்பு :

அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் **ம.வ/(கோ.மா)எண்: 96 /2021** மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகள் — 2 நகல்கள்

பெறுநர் :
செயல் அலுவலர்,
மோப்பிரிபாளையம் பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்.

நகல் - மனுதாரர்

திரு.கே.ராதா கிருஷ்ணன் மற்றும் 3 நபர்கள்
14/8, பாரதி வீதி
வெள்ளக்கிணறு
கோயமுத்தூர் மாவட்டம் - 641 029